සූර්ය බල, සුළං හා ජල විදුලි ජනන ව්‍යාපෘති සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சு

STATE MINISTRY OF SOLAR, WIND AND HYDRO POWER GENERATION PROJECTS DEVELOPMENT



வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020

2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனம்:-
சூரிய சக்தி, காற்று சக்தி மற்றும் நீர்வலு மின்னுற்பத்திக் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

செலவினத் தலைப்பு இலக்கம்:- 406

உள்ளடக்கம்:-

அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய குறிப்பு/நிறைவேற்றுச் சுருக்கம்

அத்தியாயம் 02 - முன்னேற்றமும் தூரநோக்கும்

அத்தியாயம் 03 - குறித்த ஆண்டின் ஒட்டுமொத்த நிதி சார் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டி

அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனித வளங்கள் பற்றிய குறிப்பு

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

இணைப்பு 01 - 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய குறிப்பு / நிறைவேற்றுச் சுருக்கம்

01.1 அறிமுகம்

இலங்கை மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலவளங்கள் நிறைந்த நாடு. நாட்டில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தியின் முக்கிய மூலமாக நீர்வலு உள்ளது. பாரம்பரியமற்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களாக (NCRE) கருதப்படும் காற்று சக்தி, சூரிய சக்தி மற்றும் உயிரணுத் திணிவுச் சக்தி போன்ற பிற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலவளங்களும் தேசிய மின்சார முறைமையினுள் இணைந்து காணப்படுகின்றன.

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமாகிய **'சௌபாக்கிய தூரநோக்கு'** திட்டத்தினுள் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி ஊக்குவிப்பு விடயம் பற்றி கடுமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தியை மேம்படுத்தும் முகமாக வழங்கியுள்ள முன்னுரிமை மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி சார்ந்த விவகாரங்களை மேற்கொள்ள வேண்டிய விடயம் பற்றிய இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டதன் ஊடாகப் பிரதிபலிக்கப்படுகின்றது.

அதற்கு அமைய, 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் சூரிய சக்தி, காற்று சக்தி மற்றும் நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டது.

மீனப்புதுப்பிக்கத்தகு சக்தியை ஊக்குவிப்பதன் மூலம், கனிய எண்ணெய்கள் பாவனையை படிப்படியாக குறைத்து நாடு சக்திப் பாதுகாப்பு நிலையை அடைந்து கொள்ள முடியும். இதன் மூலமாக, தூய்மையான ஒரு சுற்றாடல் நிர்மாணம் பெறும் எனவும், அது மட்டுமன்றி எரிபொருள் இறக்குமதிக்காக செலவாகும் செலவு குறைந்து அதனால் வரவுசெலவுத்திட்டத் துண்டுவிழுகை குறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனடிப்படையில் 70% மின்சார கேள்வியானது மீள்புதுப்பிக்கதகு சக்தியின் மூலமாக 2030 ஆண்டில் அடைவதற்கு எதிர்பார்க்கபடுகின்றது

01.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

தூரநோக்கு

நிலையான அபிவிருத்தி வாய்ந்த ஒரு சக்தித் துறையை உருவாக்கல்.

செயற்பணி

சூரிய சக்தி, நீர்வலு, காற்று சக்தி மற்றும் உயிரணுத் திணவுச் சக்தி முதலிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலவளங்களின் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்தல், அமைதியான அணு சக்தி உள்ளீடுகளை ஊக்குவித்தல் மற்றும் அணு சக்தி உள்ளீடுகளின் பாவனைகள், அயனாக்க கதிர்வீச்சுகளிலிருந்து பொது மக்களையும் மற்றும் சுற்றாடலையும் பாதுகாத்தல் மற்றும் மின்சக்தி மைய கருத் திட்டங்களை செயற்படுத்தல் முதலியவற்றின் நிமித்தம் வழிகாட்டுதல்.

செயற்பாடுகளும் மற்றும் கரும பணிகளும்

மின்சக்தி அமைச்சர் அவர்களின் அறிவுரைகளினதும் வழிகாட்டல்களினதும் அடிப்படையில் "குறைந்த செலவில் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதை உறுதிசெய்யும்" முகமாக அந்தந்த சட்டங்களுக்கும், கட்டளை சட்டங்களுக்கும் இணங்க சூரிய சக்தி, காற்று சக்தி மற்றும் நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்ட அபிவிருத்தி விடயத்திற்குரிய கொள்கைகளை ஆக்குவதற்கு உதவுதல், தேசிய வரவுசெலவுத்திட்டம் மற்றும் முதலீடு சார்ந்த வேலைத் திட்டங்கள் முதலிய திட்டங்களின் கீழ் காணப்படும் கருத் திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் இந்த இராஜாங்க அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் விடயங்கள் மற்றும் கரும பணிகள் ஆகியன தொடர்பான உரிய கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் மற்றும் கருத் திட்டங்களையும் செயற்படுத்தல், பின்னூட்டல் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

விஷேட முன்னுரிமைகள்

(1) களணிதிஸ்ஸவிலுள்ள மின்னுற்பத்தி நிலையத்தை இயற்கை எரிவாயு டேர்பைன் மைய மின்னுற்பத்தி நிலையமாக பரிவர்த்தனை செய்தல் மற்றும் கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்தை விஸ்தரித்தல்.

(2) உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும் மின்சாரத்தின் வினைத் திறன், அத்தகைய மின்சாரத்தின் உச்ச பாவனை ஆகியவற்றை உறுதிசெய்யும் முகமாக பரிட்சயமான ஒரு வலையமைப்பு முறைமையை உருவாக்கல்.

(3) வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் குறைந்த செலவில் மின்சாரம் கிடைப்பதை உறுதிசெய்யும் முகமாக சூரிய சக்தி முறைமையின் பாவனையை ஊக்குவித்தல்.

(4) கொழும்பு நகரப் பகுதியில் அமைந்துள்ள சகல எரிபொருள் சக்தி மூல மின்னுற்பத்தி நிலையங்களையும் இயற்கை எரிவாயு டேர்பைன் மைய மின்னுற்பத்தி நிலையங்களாக பரிவர்த்தனை செய்தல்.


(5) வீட்டுக் குடும்பங்களுக்கும் மற்றும் சிறு தொழில் முயற்சிகளுக்கும் குறைந்த செலவில் மின்சாரம் கிடைப்பதை உறுதிசெய்யும் முகமாக வீட்டுக் கூரை மீது நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி மைய மின்னுற்பத்தி முறைமைகளின் பாவனையை ஊக்குவித்தல்.

(6) மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திக் கருத் திட்டங்களை ஆரம்பிக்கும் வகையில் தனியார் துறையினரையும் மற்றும் தொழில் முயற்சியாளர் தரப்புகளையும் ஊக்குவித்தல்.

(7) 2020 ஆம் ஆண்டாகும் போது ப்ரோட்லேண்ட்ஸ் நீர்வலு மின்னுற்பத்தி நிலையத்தையும், 2021ஆம் ஆண்டாகும் போது உமா ஒயா நீர்வலு மின் உற்பத்தி நிலையத்தையும், 2023 ஆம் ஆண்டாகும் போது மொரகொல்ல நீர்வலு மின்னுற்பத்தி நிலையத்தையும் மற்றும் 2024 ஆம் ஆண்டாகும் போது தலப்பிட்டிகல நீர்வலு மின்னுற்பத்தி நிலையத்தையும் மற்றும் சீதவாக்கை கங்கை நீர்வலு மின்னுற்பத்தி நிலையத்தையும் தேசிய மின் உற்பத்தி முறைமையினுள் ஒன்றிணைத்தல்.

(8) 2021 ஆம் ஆண்டாகும் போது மன்னார் காற்று சக்தி மூல மின்னுற்பத்தி நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்படும் 100 மெ.வொ. மின்சாரத்தையும் மற்றும் மன்னார், பூனகரி மற்றும் மொனராகல் ஆகிய பிரதேசங்களில் சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி மின்னுற்பத்திக் கருத் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் உற்பத்தி செய்யக் கூடிய 800 மெகாவொட்டு மின்சாரத்தையும் தேசிய மின்சார முறைமையினுள் ஒன்றிணைத்தல்.

01.3 அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு



01.4 அமைச்சினது செயல்நோக்கின் கீழ் வரும் அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை :

2007 இன் 35 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது.

இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபை:

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணு சக்தி பற்றிய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

இலங்கை அணு சக்தி சபை:

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணு சக்தி பற்றிய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

01.5 அமைச்சினுள் இயங்கும் பிரிவுகள்

நிருவாகப் பிரிவு

சாட்டப்பட்டுள்ள கரும பணிகள்:

- அமைச்சுக்குரிய சகல நிருவாக விடயங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி
- அமைச்சினது பதவியணியின் தனியாள் கோவைகளை பேணிச் செல்லல், பராமரித்தல் மற்றும் செயலாற்றுகை சம்பந்தமான விடயங்கள்
- மனித வளங்கள் அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள்
- அமைச்சின் செயல்நோக்கின் கீழ் வருகின்ற சகல நியதிச்சட்ட சபைகளின் நிறுவன சார் விடயங்களை கண்காணித்தல் மற்றும் ஏனைய விடயப்பரப்பு சம்பந்தமான விவகாரங்கள்
- அமைச்சினது சகல போக்குவரத்து சேவைகளையும் மற்றும் சகல வகை பராமரிப்பு சேவைகளையும் நிறைவேற்றுவது சம்பந்தமான விடயங்கள்

நிதிப் பிரிவு

சாட்டப்பட்டுள்ள கரும பணிகள்:

- செயற்பாட்டு கரும விடயங்கள் மற்றும் அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் என்பவற்றின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகளுக்குரிய செலவுகளை கணக்கிடுதல் சம்பந்தமான அரசாங்க நிதி முகாமைத்துவ விடயங்களை மேற்கொண்டு நிறைவேற்றல்.
- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி சம்பந்தமான நிதியேற்பாடுகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் உள்நாட்டு நிதிகளும் மற்றும் வெளிநாட்டு நிதிகளும் பயன்படுத்தப்படுகின்ற கருத் திட்டங்களின் செலவு என்பன பற்றி அறிக்கையிட்டு உரிய நிதியேற்பாடுகளை விஞ்சாதவாறு நிருவகித்து கட்டுப்படுத்துதல்.

அபிவிருத்திப் பிரிவு

சாட்டப்பட்டுள்ள கரும பணிகள்:

- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் துறைக்குரிய கொள்கைகளைத் தயாரித்தலும் அதை அடைவதற்கான இலக்கினை எத்தனித்தாலும்.
- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திகளை தேசிய மின்சார முறைமைக்கு இணைக்கும் கட்டணங்களை நிர்ணயித்தல்.
- கருத் திட்டங்களின் நிதிகள் மற்றும் பங்களிப்புகள் முதலிய விடயங்களை ஒருங்கிணைத்தல் - பல தரப்பு ஒருங்கிணைப்பு.
- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியை அபிவிருத்தி செய்தல், அதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.
- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் துறையுடன் சம்பந்தப்படுகின்ற வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தொழிற்படுதல்.
- மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத் திட்டங்களின் நிமித்தம் நாட்டிற்கு வரும் வெளிநாட்டு பதவியணிக்கு தேவையான வீசாக்களை பெற்றுக் கொடுத்தல் / வீசா காலத்தை நீடிக்கும் முகமாக குடிவரவு குடியகல்வு திணைக்கத்திற்கு சிபாரிசு செய்தல்.
- மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத் திட்டங்களை செயற்படுத்தும் முகமாக காணிகள் சுவீகரிப்பு சம்பந்தமான விடயங்களை ஒருங்கிணைத்தல்.

அத்தியாயம் 02 - முன்னேற்றமும் தூரநோக்கும்

02.1 இலங்கையின் தேசிய சக்திக் கொள்கை மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி இலக்குகள்

இலங்கையை ஒரு சாதாரண சமூக அபிவிருத்திற்கு பரிவர்த்தனை செய்யும் வகையில் உதவும் முகமாக இலகுவில், சுமக்கக் கூடிய விலையில் மின் சக்தி சார்ந்த சேவைகளை விநியோகிக்கும் பொருட்டு தூய்மையான, பாதுகாப்பான, நிலையான, நம்பத்தகுந்த மற்றும் சாத்தியமான ஒரு மின் சக்தி விநியோகத்தை பேணுவதை உறுதிசெய்வது மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கொள்கை மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி இலக்குகளின் அடிப்படைக் குறிக்கோளாகும். அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் "சௌபாக்கிய தூரநோக்கு தேசிய கொள்கைப் பிரகடனத்திற்கு" இணங்க, 2030 ஆம் ஆண்டாகும் போது இந்த நாட்டின் மின்சாரத் தேவையில் ஒரு உச்ச விகித அளவான 70% இணை, மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அடங்கலாக மிகவும் சுற்றாடல்நேயமான தூய்மையான சக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்து பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த இலக்கை அடைந்து கொள்ளும் பொருட்டு, இலங்கை மின்சார சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இ.மி.ச. நீண்டகால மின்னுற்பத்தித் திட்டத்தைத் தயாரித்து வெளியிடும்.

02.2 மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பங்களிப்பை மேலும் அதிகரித்தல்

தேசிய மின்சார முறைமையின் நிலையான மின்னுற்பத்திக் கொள்ளளவு 2020 ஆம் ஆண்டு 4,621 மெ.வொ. என்ற அளவிலுள்ளது. இதிலுள்ள மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியினது பங்களிப்பு 54% வீதமாகும். நீர்வலு, இலங்கையிலுள்ள மின்சார முறைமையின் பிரதான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தி மூலவளமாகும். பாரம்பரியமற்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (NCRE) என அழைக்கப்படும் சிறிய நீர்வலு, காற்று சக்தி, சூரிய சக்தி மற்றும் உயிரணுத் திணிவுச் சக்தி, தாவர சக்தி முதலிய ஏனைய பிற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களும் நாட்டு மின்சார முறைமைக்கு இணைக்கப்படுகின்றன. உள்நாட்டு மக்களை சக்தித் துறை சார் கைத்தொழிலில் ஈடுபடுத்தல் மற்றும் நிலைபெறுதகு தன்மையை அடைதல் ஆகிய குறிக்கோள்களுடன், கீழ்காணும் திறமுறைத் திட்டங்களைப் பின்பற்றி சுற்றாடல்நேயமான சக்தி மைய மூலவளங்களின் பாவனையை ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக வெளிநாட்டு அந்நியசெலாவணி சுமையை குறைக்கும் முகமாக தேசிய மின்சார விநியோக விடயத்தில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் பங்களிப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சக்தி மூலவளம்	சக்தி உற்பத்திக் கொள்ளளவு (மெ.வொ.)	மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை
பிரதான நீர்வலு	1,399	17
மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி		
சிறியளவான நீர்வலு	422.97	211
காற்று சக்தி	248.45	18
சூரிய சக்தி	70	27
தாவர சக்தி மற்றும் உயிரணுத் திணிவுச் சக்தி	38.11	12
சூரிய சக்தி சூரிய சக்தி மின்னுற்பத்திப் பலகை முறைமை	337	
மொத்தம்	**2,515.53**	**285**

2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் இறுதியளவில் 16,304 ஜிகாவொட்டு மணித்தியால மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த மின் உற்பத்தியில் 24% வீதம், நீர்வலு (சிறிய அளவான மின்னுற்பத்தி நிலையங்கள் தவிர) மின்சாரமாகும். பாரம்பரியமற்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (NCRE) மூல வளங்களான சிறிய நீர்வலு, சூரிய சக்தி, காற்று சக்தி மற்றும் உயிரணுத் திணிவு சக்தி ஆகியவற்றின் பங்களிப்பு 9% வீதமாகும். சூரிய சக்திப் பலகை முறைமை மின்சார உற்பத்தி பங்களிப்பு, சக்திக் கட்டமைப்பில் 2% வீதமாகும்.

02.3 பிரதான நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்டங்களை செயற்படுத்தல்

மொரகொல்ல நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்டம் (31 மெகா வொட்டு)

இந்த மொரகொல்ல நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்டம் கண்டி மாவட்டத்தின் உலப்பன பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இதன் மின்னுற்பத்தி நிலையம் மகாவலி கங்கை ஆற்றுப் படுக்கைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து வருடாந்தம் 100 ஜிகாவொட்டு மணித்தியால மின்சாரத்தை உற்பத்தி செய்ய

எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கருத் திட்டம் சார்பாக அசிய அபிவிருத்தி வங்கி 2017 ஆம் ஆண்டு 113.86 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை கடன் மாணியமாக "பசுமை சக்தி அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத் திறன் மேம்பாட்டு முதலீட்டுக் கருத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.

இந்தக் கருத் திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டன. இந்தக் கருத் திட்டத்தினது தற்போதைய பௌதீக முன்னேற்றம் 27% வீதமாகும். நாட்டில் தற்பொழுது எழுந்துள்ள கொவிட்-19 தொற்றுநோய் நிலை காரணமாக நிர்மாண விடயங்களின் முன்னேற்றம் குறைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் இந்தக் கருத் திட்டத்தின் பணிகளை நிறைவு செய்து மின்சார உற்பத்தியை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

ப்ரோட்லேண்ட்ஸ் நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்டம் (35 மெகா வொட்டு)

ப்ரோட்லேண்டஸ் நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்டத்தின் நிலையான சக்தி உற்பத்திக் கொள்ளளவு 35 மெகா வொட்டாகும். இதன் மூலம் வருடாந்தம் 126 ஜிகாவொட்டு மணித்தியால மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. இதன் மின்னுற்பத்தி நிலையம் கேகாலை மாவட்டத்தின் கித்துல்கல எனும் இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது.

இந்த மின்னுற்பத்திக் கருத் திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்டுள்ள செலவு 82 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்த செலவில் 85% வீதம் சீனாவினது கைத்தொழில் மற்றும் வணிக வங்கியிலிருந்து (ICBC) பெற்றுக் கொள்ளப்படும் கடன் நிதியால் சமாளிக்கப்படும். எஞ்சிய 15% வீத செலவு இலங்கை ஹற்றன் நெஷனல் வங்கியிலிருந்து பெறப்படவுள்ள கடன் நிதியால் சமாளிக்கப்படும். எனினும், ICBC வங்கியினது கடன் செல்லுபடியாகும் காலம் 2019.12.16 ஆம் திகதி முடிவடைந்துள்ளதால், எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதற்கு தேவையான நிதிகளை பெற்றுக் கொள்ளும் முகமாக இ.மி.ச. மூலமாக மக்கள் வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கருத் திட்டத்தின் பணிகளில் 79% வீதமான பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் மின்சார உற்பத்தி நடவடிக்கையை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

உமா ஓயா நீர்வலு கருத் திட்டம் (120 மெகா வொட்டு)

பதுளை மாவட்டத்தின் வெலிமடப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திக் கருத் திட்டம் நீர்ப்பாசன நீர்வளங்கள் முகாமைத்துவ

அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்றது. இந்தக் கருத் திட்டத்திலிருந்து சுமார் 290 ஜிகாவொட்டு மணித்தியால மின்சாரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப் படுகின்றது. இந்தக் கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த செலவு 514 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

நிர்மாணப் பணிகளில் ஏற்கெனவே சுமார் 96% வீத அளவான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு திசம்பர் மாதமளவில் குறித்த இந்தக் கருத் திட்டத்தை நிறைவு செய்து, அதிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை தேசிய மின்சார முறைமையில் உள்ளீர்க்க எதிர்பார்க்கப்படுகின்றது.

சீதவாக்க கங்கை நீர்வலு கருத் திட்டம் (14 மெகா வொட்டு)

களணி கங்கையின் ஒரு கிளை நதியான இந்த சீதவாக்க கங்கையை மையமாக கொண்டு கேகாலை மாவட்டத்தில் செயற்படுத்துவதற்கு இனங்காணப்பட்டுள்ள இந்தக் கருத் திட்டம் பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ள சாத்தியவள ஆய்வு பிராகரம், கருத் திட்டத்தின் ஆகுசெலவு 80 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 20 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய ஒரு மின்னுற்பத்தி நிலையத்தை முதலில் செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இந்தக் கருத் திட்டம் மதிப்பிடப்பட்டுள்ள மேற்குறித்த ஆகுசெலவினது அடிப்படையில் செயற்படுத்தப்படுவதால் இதிலிருந்து கிடைக்கும் நன்மைகள் குறையலாம் என இலங்கை மின்சார சபை அபிப்பிராயப்படுகின்றது. எனவே, இந்தக் கருத் திட்டத்தை 14 மெகா வொட்டு (07 x 2 மெ.வொ.) சிறிய அளவான ஒரு மின்னுற்பத்தி நிலையமாக செயற்படுத்தும் சாத்தியம் பற்றி இலங்கை மின்சார சபையின் ஒரு துணை நிறுவனமான ஸ்ரீ லங்கா எனெர்ஜீஸ் ப்ரைவட் லிமிற்றட் எனும் நிறுவனம் மீண்டும் ஒரு சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு வருகின்றது.

தல்பிட்டிகல நீர்வலு மின்னுற்பத்திக் கருத் திட்டம் (15 மெகா வொட்டு)

இந்த நீர்வலு மின்னுற்பத்தி நிலைய கருத் திட்டம் நீர்ப்பாசன அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. சீன எக்ஸிம் வங்கியுடன் நீர்ப்பாசன திணைக்களம் ஒரு கடன் ஒப்பந்தத்தை செய்துள்ளது. இந்தக் கருத் திட்டத்தின் வடிவமைப்பு பணிகள் நீர்ப்பாசன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கருத் திட்டத்திற்கு IEE அங்கீகாரம் கிடைத்துள்ளது. மீள்குடியேற்றத்திற்கான காணிகள் இனங்காணப்பட்டுள்ளன. நஷ்டஈட்டுக் கொடுப்பனவு மற்றும் காணி சுவீகரித்தல் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமூக பொருளாதார ஆய்வு அறிக்கையும் மற்றும் மீள்குடியேற்ற செயல் திட்டமும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கருத் திட்டத்தை நிறைவு செய்து 2024 ஆம் ஆண்டில் தேசிய மின்சார முறைமைக்கு இணைக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

02.4 காற்று சக்தி மூல மின்னுற்பத்தி

மன்னார் காற்று சக்தி உற்பத்திப் பேட்டை (300 மெகா வொட்டு)

மன்னார் காற்று சக்தி உற்பத்திப் பேட்டை இலங்கையிலுள்ள மிகப் பெரிய முதலாவது பெரியளவான சூரிய சக்தி உற்பத்திப் பேட்டையாகும். இது மன்னார் தீவின் தென் கடலோரப் பகுதியில் அமைந்துள்ளது. முதல் கட்டமாக 100 மெகா வொட்டு காற்று சக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தக் கருத் திட்டம் 3.45 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய 30 அதி நவீன டேர்பைன்களை கொண்டு அமைந்துள்ளது. இந்த மின்னுற்பத்திப் பேட்டையினது ஒட்டுமொத்த நிலையான சக்தி உற்பத்தி கொள்திறன் 103.5 மெகா வொட்டாகும். இலங்கையின் பிரதான பருவப்பெயர்ச்சிக் காற்று முறைமைகளின் சக்தியை பயன்படுத்தி நன்மைகள் அடையும் வகையில் இந்த சக்தி உற்பத்திப் பேட்டை நிர்மாணிக்கப்பட்டது. இதிலிருந்து வருடாந்தம் 400 ஜிகாவொட்டு மணித்தியால மின்சாரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த நிதி மூலம் இதன் நிர்மாண பணிகள் மேற்கொள்ளப்படும். 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பமாகிய இந்தக் கருத் திட்டத்தின் ஆரம்ப கட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 08 ஆம் திகதி முதல் "தம்பபவனி" காற்று சக்தி மின்னுற்பத்தி நிலையம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது. இந்த சக்தி உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்த 30 மெகா வொட்டு சக்தி மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்டுள்ளது. இந்த மின்னுற்பத்தி நிலையத்தின் எஞ்சிய 70 மெ.வொ. மின்சாரத்தை 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத்தில் மின்சார முறைமையினுள் சேர்க்க எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்ற கடன் நிதியில் எஞ்சிய தொகை இந்த ஸ்தலத்திலேயே 20 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய ஒரு மேலதிக டேர்பைனை நிறுவுவதற்கு பயன்படுத்தப்படும்.

இந்தக் காற்று சக்தி உற்பத்திப் பேட்டையின் இரண்டாம் கட்டமாக, மேலும் 200 மெகா வொட்டு சூரிய சக்தி மின்சாரத்தை தனியார் துறை முதலீடு ஊடாக உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை மன்னார் தீவில் இனங்கண்டுள்ள இடங்களின் நிலஅளவை விடய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் கருத் திட்டம் பற்றிய ஒரு சாத்தியவள ஆய்வை மேற்கொள்வதற்குத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பூனகரி கலப்பு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திப் பேட்டை (காற்று சக்தி மூலம் - 240 மெகா வொட்டு மற்றும் சூரிய சக்தி மூலம் - 150 மெகா வொட்டு)

தெற்காசியாவில் அதிகளவான காற்று சக்தி சாத்தியம் காணப்படுகின்ற ஒரு பிரதேசமாக பூனகரி கருதப்படுகின்றது. தனியார் முதலீட்டுத் திட்டத்தின் கீழ் இந்த சக்தி உற்பத்திப் பேட்டையில் 240 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள் திறனுடைய ஒரு காற்று சக்தி மின்னுற்பத்தி நிலையத்தையும் மற்றும் 150 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய ஒரு சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையத்தையும் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சக்தி உற்பத்திப் பேட்டையை நிர்மாணிக்கும் பொருட்டு தேவையான காணி இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் இனங்காணப்பட்டு, நிலஅளவை சார் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூர்வாங்க சாத்தியவள ஆய்வும் மற்றும் பர்ட்டு என்ட் பெட் என அழைக்கப்படும் ஆய்வும் மேற்கொண்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. சர்வதேச நிதி கூட்டுத் தாபனத்தினால் (IFC) கேள்வி மனு பிரேரணைகளை (RFP) அழைப்பதற்கு தேவையான கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் அந்த கேள்வி மனு பிரேரணைகள் அழைக்கப்படவுள்ளன. சுற்றாடல் மற்றும் சமூக தாக்க மதிப்பீட்டையும் (ESIA) புவி தொழில் நுட்ப ஆய்வையும் மேற்கொள்ளும் முகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியை வழங்க உடன்பட்டுள்ளது.

சுண்ணாகம் காற்று சக்தி உற்பத்திக் கருத் திட்டம் (2 X 10 மெகா வொட்டு)

10 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறன் வாய்ந்த ஒரு இரட்டைக் காற்று சக்தி மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் தேசிய மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்டது. இதன் வணிகளவான செயற்பாடுகள் சுயாதீன மின்னுற்பத்தி நிலையமாக (IPP) மேற்கொள்ளப்படும்.

சிறியளவான காற்று சக்தி உற்பத்திக் கருத் திட்டம் (60 மெகா வொட்டு)

தனியார் துறை முதலீடுகளை பயன்படுத்தி மன்னார், போலவத்த, மாதம்பே, கப்பல்துறை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் மொத்தமாக 60 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய (மெகா வொட்டு 1 முதல் 10 வரையான சக்திக் கொள்திறனுடைய சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையங்கள்) கொண்ட சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையத்தை தாபிப்பதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. இதற்கு தேவையான பெறுகை விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை காற்று சக்தி மின்னுற்பத்தி நிலையத்திற்கு 2021 ஆம் ஆண்டு

சனவரி மாதத்தில் கேள்வி மனு ஒப்பந்தம் வழங்கப்படவுள்ளது. மன்னார் மற்றும் மாதம்பே காற்று சக்தி மின்னுற்பத்தி நிலையங்களுக்கான பெறுகை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

02.5 சூரிய சக்தி மூல மின்னுற்பத்தி

சூரிய பள சங்கிராமய - கூரை மீது சூரிய சக்தி மின்னுற்பத்திப் பலகையை நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மையமான மின்சார உற்பத்தியை இலங்கையில் பிரபல்லியப்படுத்தி, அதன் மூலம் குறைந்த விலையில் மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக சமூகத்தில் பல நிலைகளிமுள்ளவர்களுக்கு உதவுவதற்கு இந்த கூரையின் மீது சூரிய சக்திப் பலகையை நிறுவும் பணி 2009 தொடங்கப்பட்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

50 கிலோவொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறன் வரை கூரையின் மீது சூரிய சக்தி முறைமைகளை தாபிப்பதற்கு கடன் உதவியை பெற்றுக் கொள்ள 2019 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியினது 50 மில்லியன் அ.டொ. நிதி வசதியின் கீழ் அரசாங்கம் வீடு, கைத்தொழிற்சாலைகள், வணிக சார் நிறுவனங்கள் முதலிய வகுதிகளுக்கு குறைந்த வட்டியில் ஒரு கடன் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. 2020 ஆம் ஆண்டு இறுதியளவில், நாடு முழுதிலும் பரந்துள்ள 29,000 சூரிய சக்தி முறைமைகளின் ஊடாக வீட்டுக் கூரை மீது நிறுவிய சூரிய சக்தி உற்பத்தி முறைமைகளிலிருந்து மொத்தம் 321 மெகா வொட்டு மின்சாரம் தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்டிருந்தது.

சிறியளவான காணியில் தாபிக்கப்படக் கூடிய சூரிய சக்தி மின்னுற்பத்தி பொறித் தொகுதி (1 X 35 மெகா வொட்டு மற்றும் 1 X 70 மெகா வொட்டு)

இந்த மின்னுற்பத்திப் பொறித் தொகுதிக் கருத் திட்டம் இரட்டையின் ஊடாக, 1 மெகா வொட்டு ஒரு அலகு சக்திக் கொள்திறனுடைய ஒரு சிறிய மின்னுற்பத்தி நிலையமாக காணியில் நிறுவப்படக் கூடிய சூரிய சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதி தனியார் முதலீட்டின் ஊடாக தாபிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த சக்தி உற்பத்திக் கொள்திறன் 105 மெகா வொட்டாகும். இதன் 31 மின்னுற்பத்திப் பொறி தொகுதிகளின் தாபிப்பு வேலைகள் நிறைவு செய்யப்பட்டு தேசிய மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்டுள்ளன. 75 மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. 2021 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் அந்த நிர்மாண பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. திட்டமிடப்பட்டு

இருந்த எஞ்சிய மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை கருத்திற் கொள்ளும் போது, பல நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அங்கீகாரத்தை எதிர்பார்த்தல், நிதி சார்ந்த பிரச்சினைகள் முதலிய பிரச்சினைகளை இவை எதிர்நோக்குகின்றன. இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சின் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

10 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறன் வாய்ந்த பொலன்னறுவை (கதுருவெலவிலுள்ள) சூரிய சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதி கோமரிக்கா (கற்றாளை) பயிர்களை உள்ளடக்கி இயங்குகின்றது. 2020 ஆம் ஆண்டு இதற்கான கேள்வி மனு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இதன் இயக்கச்செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

01 மெகா வொட்டு முதல்10 மெகா வொட்டு வரையான சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய சூரிய சக்தி மின்னுற்பத்தி பொறித் தொகுதி (மொத்த சக்தி உற்பத்திக் கொள்திறன் 150 மெகா வொட்டு)

01 மெகா வொட்டு முதல் 10 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய மொத்தம் 150 மெகா வொட்டு மின்சார உற்பத்தி திறன் வாய்ந்த இந்த சூரிய சக்தி மின்னுற்பத்திக் கருத் திட்டத்தை தனியார் முதலீட்டு திட்டத்தின் கீழ் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. 147 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறன் வாய்ந்த ஒரு கருத் திட்டத்தின் நிமித்தம் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் கேள்வி மனு ஒப்பந்தத்தை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

20 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய சூரிய சக்தி மின் உற்பத்தி பொறித் தொகுதிகள் - வாழைச்சேனை (10 மெகா வொட்டு) மற்றும் வவுனதீவு (10 மெகா வொட்டு)

வாழைச்சேனை மற்றும் வவுனதீவு ஆகிய பிரதேசங்களில் 10 மெகா வொட்டு சக்தி உற்பத்தி கொள்திறனுடைய இரண்டு சூரிய சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்பொழுது தேவையான காணிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விரு சூரிய சக்தி மின்னுற்பத்தி திட்டங்களும் 2022 ஆம் அண்டளவில் இணைத்தது கொள்ள எதிர்பக்கபடுகின்றது

சியம்பலாண்டுவ சூரிய சக்தி உற்பத்திப் பேட்டை (100 மெகா வொட்டு)

100 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய மொனரால் மாவட்ட சியம்பலாண்டுவ பகுதியில் தாபிக்கப்படும் சூரிய சக்தி உற்பத்திப் பேட்டை, இலங்கையில் முதலாவது பாரியளவான சூரிய சக்தி உற்பத்திப் பேட்டையாகும். இந்த சக்தி உற்பத்திப் பேட்டையை இயக்கும் பொருட்டு 500 ஏக்கர் அளவான காணி இனங்காணப்பட்டுள்ளது. பூர்வாங்க சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. தற்பொழுது சுற்றாடல் சார் மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தக் கருத் திட்டத்தின் நிதி மற்றும் தொழில் நுட்ப விடயங்களின் பகுப்பாய்வுக்கும் மற்றும் கேள்வி மனு பிரேரணைகளை அழைப்பதற்கும் உரிய ஆவணங்களை தயாரிப்பதற்கு தேவையான தொழில் நுட்ப உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி பெற்றுத் தரும். அனுப்பும் வசதிகளை உள்ளடக்கி ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இந்தக் கருத் திட்டத்திற்குரிய ஒரு தொழில்முயற்சி மாதிரி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத் திட்டத்திலிருந்து வருடாந்தம் 148 ஜிகாவொட்டு மணித்தியால மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்திய கடன் நிதி உதவித் திட்டத்தின் கீழ் சூரிய சக்தி மின்னுற்பத்திக் கருத் திட்டத்தை செயற்படுத்தல்

இந்த சூரிய சக்தி அபிவிருத்திக் கருத் திட்டத்திற்கு இந்திய எக்ஸிம் வங்கி மூலம் ஒரு 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மானியத்தை வழங்க இந்திய அரசாங்கம் உடன்பட்டுள்ளது. அரச கட்டிடங்களுக்கு கூரைகளின் மீது நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி மின்னுற்பத்திப் பலகை முறைமையை செயற்படுத்தல், மிதக்கும் சூரிய சக்தி மின்னுற்பத்திக் கருத் திட்டம் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு சக்திக் களஞ்சிய வசதிகள் அடங்கிய சூரிய சக்திப் பொதிகளை அறிமுகப்படுத்தல் முதலிய செயற்பாடுகளை குறித்த இந்தக் கருத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டினது முதல் பகுதியில் இந்தக் கருத் திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

02.6 சிறிய அளவான நீர்வலு மின்னுற்பத்திப் பொறித் தொகுதி

11.84 சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய சிறியளவான ஒரு நீர்வலு மின்னுற்பத்தி பொறித் தொகுதி தனியார் துறை முதலீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது. 2021 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் இதனை தேசிய மின்சார முறைமைக்கு இணைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 12.4 சக்தி உற்பத்திக்

கொள்திறனுடைய சிறிய அளவான நீர்வலு மின்சாரம் 2021 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் தேசிய மின்சார முறைமைக்கு இணைக்கப்படும்.

02.7 உயிரணுத் திணிவுச் சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதி

தற்பொழுது 12 மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளின் ஊடாக 38.11 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறன் தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கப்படும். 2021 ஆம் ஆண்டளவிலும் 10 மெகா வொட்டு மின்சாரத்தை தேசிய மின்சார முறைமைக்கு இணைக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

02.8 கழிவு சக்தியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகள்

நாட்டினுள் காணப்படும் கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இரண்டு மின்னுற்பத்தி பொறி தொகுதிகள் தொடர்பான மின்சக்தி கொள்வனவு ஒப்பந்தம் (PPA) இலங்கை மின்சார சபையினால் செய்து கொள்ளப்பட்டுள்ளது. 10 மெகா வொட்டு சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய முத்துராஜவெலவில் குவிந்து காணப்படும் கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின்னுற்பத்தி பொறித் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் வர்த்தக சார் செயற்பாடுகளை 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதமளவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 10 மெகா வொட்டு சக்தி உற்பத்தி கொள்திறனுடைய கறதியானாறில் குவிந்துள்ள கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளின் நிர்மாண பணிகளை 2022 ஆம் ஆண்டு நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

02.9 டீசல் எரி சக்தி அனல் மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை, திரவநிலை இயற்கை எரிவாயு (LNG) சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளாக பரிவர்த்தனை செய்தல்

இலங்கையில் திரவநிலை இயற்கை எரிவாயு வணிக மட்டச் செயற்பாடுகளை 2024 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் போது நாட்டில் திரவநிலை இயற்கை எரிவாயு வசதிகளை வெற்றிகரமாக தாபித்த பின்னர் தற்பொழுது இயங்குகின்ற டீசல் மின்னுற்பத்தி பொறித் தொகுதிகளை / கன எரிபொருள் எரிதகன அனல் சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை

திரவநிலை இயற்கை எரிவாயு சக்தி மின்னுற்பதிப் பொறித் தொகுதிகளாக பரிவர்த்தனை செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

திரவநிலை இயற்கை எரிவாயு விநியோகமும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியும்

உத்தேச மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கு தேவையான திரவநிலை இயற்கை எரிவாயுவை விநியோகிப்பதற்காக பின்வரும் கருத் திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

நிர்மாணித்து உரிமை மாற்றிக்கொடுத்தல், இயக்கச்செயற்பாடுகள் (BOO) முறையின் கீழ் கெரவலப்பிட்டியவில் ஒரு மிதக்கும் மீள்சுழற்சி சக்திக் களஞ்சிய அலகையும், ஒரு மின்சார கம்பியிணைப்பு முறைமையையும் இ.மி.ச. மூலம் நிர்மாணித்தல்

இதன் நிமித்தம் தனியார் துறை முதலீட்டிற்கு கேள்வி மனுக்களை அழைக்கும் கேள்வி ஆவணங்கள் (RFP) ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர்களின் உதவியுடன் இ.மி.ச. மூலம் தயாரிக்கப்படும். அதற்கமைய 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் இந்தக் கருத் திட்டத்திற்கான கேள்வி மனுக்கள் அழைக்கப் படும்.

மிதக்கும் மீள்சுழற்சி சக்திக் களஞ்சிய அலகிலிருந்து மின்னுற்பத்திப் பொறித் தொகுதி வரை ஒரு திரவநிலை இயற்கை எரிவாயு குழாய் மார்க்கத்தை நிர்மாணித்தல்

இந்த குழாய் மார்க்கத்தின் நிர்மாணம் சபந்தமான பொறுப்பை இலங்கைப் பெற்றோலிய கூட்டுத் தாபனம் ஏற்கும்.

திரவநிலை இயற்கை எரிவாயு விநியோகம்

குறித்த மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கு திரவநிலை இயற்கை எரி வாயுவை விநியோகிக்கும் முகமாக 05 வருடங்களுக்கு என ஒரு விஷேட அனுமதிப் பத்திரம் மின்சக்தி அமைச்சு மூலம் இலங்கை மின்சார சபைக்கு (இ.மி.ச.) வழங்கப்படும். இந்த மின்னுற்பத்திக் கருத் திட்டங்களின் இயக்கச் செயற்பாடுகள் 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

02.10 சவால்கள்

1. மின்சக்தித் துறையின் நிதி நிலை
2. நிர்மாண பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை உரிய கால நேரத்திற்கு இயக்குதல்
3. திரவநிலை இயற்கை எரிவாயுவை (LNG) விநியோகிப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
4. பிரிவு சார்ந்த மறுசீரமைப்புகளை செயற்படுத்தல்
5. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் துறைக்கு புதிய தொழில் நுடட்பங்களை செயற்-படுத்தல் (ஸ்மார்ட்டு மாணிவாசிப்பு, ஸ்மார்ட்டு வலையமைப்பு எண்ணக்கரு)
6. மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கலவையின் போது மின்சார வலையமைப்புக்கு உதவும் பயன்பாட்டு முறைமை போதாததால் ஏற்படும் தொழில் நுட்ப சார் சவால்கள்

02.11 எதிர்கால குறிக்கோள்கள்

- 2030 ஆம் ஆண்டளவில் இந்த நாட்டு மின்சக்தித் தேவையில் 70% வீதத்தை, மீளப்புதுப்பிக்கது சக்தி அடங்கலாக சிறிய அளவான சுற்றாடல்நேய தூய சக்தி மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளல்
- ஸ்மார்ட்டு வலையமைப்பு எண்ணக்கருவை (Smart Grid concept) செயற்படுத்தல்
- விஷேட மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தித் தொழில் நுட்பங்களின் பால் நகர்தல்
- கடலோரப் பகுதியில் மின்னுற்பத்தி நிலையங்களை நிர்மாணித்தல்
- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி களஞ்சிய வசதிகளை இந்த நாட்டில் ஏற்படுத்தல்
- நீரில் மிதக்கக் கூடிய சூரிய சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை நிர்மாணித்தல்

அத்தியாயாம் 03 - 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை

03.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ -எப்

2020 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூபா

வ. செ. திட்டம் 2020		குறிப்பு	உண்மையான		
			நடப்பு ஆண்டு	முன்னைய ஆண்டு	
-	**வருமான பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	**1**	-	-	ஏசீஏ -1
-	உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி	**2**	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	**3**	-	-	
-	வரியல்லா வருமானம் மற்றும் பிற	**4**	-	-	
-	**மொத்த வருமான பெறுகைகள் (அ)**		-	-	
	வருமானமல்லாத பெறுகைகள்				
-	திறைசேரி முற்பணம்		*8,840,000*	-	*ஏசீஏ -3*
-	வைப்புகள்		-	-	*ஏசீஏ -4*
-	முற்பணக் கணக்குகள்		*685,347*	-	*ஏசீஏ - 5/5(அ)*
-	வேறு பெறுகைகள்		*85,449*	-	
-	**மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)**		***9,610,796***	**-**	
-	**மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ)+(ஆ)**		***9,610,796***	-	
	கழி: செலவினம்				
-	**மீண்டெழும் செலவினம்**		**-**	-	
-	வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள்	**5**	*15,042,103*	-	
-		**6**	*8,350,046*	-	*ஏசீஏ 2(II)*

	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் உதவுதொகை, மானியம்				
-	மற்றும் மாற்றல்கள்	7	*233,265,097*	-	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	9	-	-	
-	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)**		**256,657,248**	-	
	மூலதனச் செலவினம்				
-	மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	10	-	-	
